# மௌனத்தின் குரல்கள்

கோ. கேசவ்கிருஷ்ணா

அவை உள்ளம் என்னும் பெரும் நிலத்தில்
நெடிந்து உயர்ந்த பனை மரங்கள்;
அவை வானம் என்னும் பெரும் கடலில்
விளைந்து தவழ்ந்து இருக்கும் சிறு முகில்கள்;
அவை அமைதி என்னும் தொன் மரத்தின்
ஆழம் கண்ட பெரும் வேர்கள்;
அவை பேசாமல் பேசுகின்ற - சிறுஞ்ச்
செவிகளால் கேட்க முடிய பெரும் வார்த்தைகள்!

மௌனத்தின் குரல்கள்

உள்ளம் என்னும் பெரும் கடலில்
சீரும் சுறாகளும் அவைகள் தான்;
வாழ்க்கை என்னும் பெரும் களத்தில்
வீழ்ந்துடா ஆயுதங்களும் அவைகள் தான்;
இன்னல்கள் நீக்குகின்ற நற் குரலில்
இறைவனின் வாய்மொழிகள் மௌனம்தான்;
இனிய பச்சை நிற பசுங் குரலில்
இயற்கையின் மனம் கொடுப்பது மௌனம்தான்;
பண்ணவன் பரிவு கண்ட இக் குரல்கள்
படயோன் அஞ்சி நடுங்கும் பெரும் மௌனம்;
ஐம்புலனில் இருந்திடதா பெரும் உணர்ச்சி
ஐம்பொறிகள் உணர்த்துகின்ற சிறு மௌனம்!!

மௌனத்தின் குரல்கள்
உள்ளம் உறங்கும் பொழுது இருப்பவையே
பெரும் போரின் போது இருப்பதில்லை;
அங்கும் இங்கும் எங்கும்  எதிலும் இரு
மனிதன் தேடும் பொழுது இருப்பதில்லை;
வானம் பூமி பார்த்து இருப்பதுண்டு

என்றும் கீழ்நோக்கி வருவதில்லை
வாழ்க்கை என்பதில் நஷ்டம் இருப்பதுண்டு
அதில் மௌனம் என்றும் சாவதில்லை!!

மௌனத்தின் குரல்கள்

அவை அடக்க முடியா உணர்ச்சிகளின்
சின்னஞ்சிறு குரலில் தோன்றும் பெரும் வார்த்தை;
சிறிது கற்கள் போல் மூழ்கிடுமே சிறிது
தாமரை போல் மிதந்திடுமே;
காற்றில் மிதந்திடா மொழிகள் இவை
மனதின் நிரந்தரமான எழுத்து இவை;
மாண்டோர்கள் கண் கண்ட சிறந்த குரல்
பின் தொடர முடியாத மௌனத்தின் குரல்கள்!!



கேசவ்கிருஷ்ணா, தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் பிறந்தவர். இளம் வயதில் இருந்து இவருக்கு தமிழ் மீது ஒரு தனிப் பற்று. கவிதை எழுதுவதில் மிகுந்த நாட்டம் கொண்டவர், பல்வேறு போட்டிகளில் கலந்து பரிசுகளும் வென்றுள்ளார். தனது கல்லூரி காலங்களில் "நித்திலம்" என்னும் தமிழ் ஆராய்ச்சி மையத்திற்கு தலைமை வகுத்தது குறிப்பிடத்தக்கது.